Pearl and Chank fisheries

*1600 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாடு முத்து, சங்கு குளி தொழிலாளர் சங்கத்தின் சார்பில் சங்கு குளி தொழில் இலாகா மூலம் நடத்தவேண்டுமென்று கோரி 28—6—1961 அமைச்சரிடம் மனு கொடுத்துள்ளார்களா ?

(இ) அதன்மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes. Sir. A petition, dated 28th June 1961 was received from this Union requesting departmental operations in respect of Ramanathapuram Chank Fishery as in the case of Tuticorin Chank Fishery.

(*b*) The Government have considered this question in detail and decided that departmental operations of the Ramanathapuram Chank Fishery is not possible for the present and have therefore ordered its lease by tender. However, the petition has been transferred to the Director of Fisheries for disposal.

SRI V. K. KOTHANDARAMAN : இதைச் சர்க்காரே எடுத்து நடத்துவதன் மூலம், இதை மேலும் லாபகரமாக நடத்தி, அபிவிருத்தி செய்யக்கூடும் அல்லவா ? ஆகவே, மீண்டும் இதைப் பரிசீலனை செய்து சர்க்காரே எடுத்து நடத்த ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அரசாங்கமே இதைத் தற்போது எடுத்து நடத்த முடியாது என்றுதான் தென்படுகிறது. ஆனால், மேலும் பரிசீலனை செய்வதில் ஒரு குறையும் இல்லை.

SRI A. A. RASHEED : May I know the lease amount realized from this transaction?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The lease amount for the period up to 6th August 1961 is Rs. 2,27,887.

SRI M. KALYANASUNDARAM : தொழிலாளர்களே கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொண்டு இதைச் செய்ய முன்வந்தால், இந்த "லீஸை" அவர்களுக்குக் கொடுக்க என்ன ஆட்சேபணை இருக்க முடியும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதை நடத்துவதில் அரசாங்கத்திற்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தூத்துக்குடியில் இப்பொழுது அரசாங்கம் நடத்திக்கொண்டு வருகிறது. இராமநாதபுரத்திலும் இதை எடுத்து நடத்துவதென்றால், தொழிலாளர்கள் கிடைப்பதற்கு உள்ள பிரச்னை இருக்கிறது. தொழிலாளர்கள் முன் வரவும் இல்லை. அது சாத்தியம் என்று அரசாங்கம் கருதவும் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : "தொழிலாளர்கள் முன்வரவில்லை" என்று சொல்வது சரியல்ல. நானே அம்மாதிரி மனுவை டைரக்டர் ஆப் பிஷரீஸ் இடம் கொடுத்திருக்கிறேன். அது ஒருபுறமிருக்க, தொழிலாளர்களுக்கு அதுவரையில் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படவேண்டும் என்பதையாவது குத்தகை நிபந்தனையில் ஒன்றாகச் சேர்த்து குத்தகை விடப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : குத்தகைக்காரர்களிடம் அந்த நிபந்தனை வைக்க முடியாது. அரசாங்கம் எடுத்து நடத்தும் பிஷரீஸைப் பொறுத்தவரையில், அங்குள்ள தொழிலாளர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது.